மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

முன்னிலை: திரு. ஆர். ராதாகிருஷ்ணன், பி.எ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி.

2023-ஆம் வருடம் அக்டோபர் மாதம் 10-ஆம் நாள் செவ்வாய்கிழமை

திருவள்ளுவராண்டு 2054, சோபகிருது வருடம், புரட்டாசி திங்கள் 23 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.2/2022 இன் அ.வ.எண்.62/2022**

முருகன் ... மனுதாரர் / வாதி

**/ எதிராக /**

1. சாந்தி
2. மணி
3. வெற்றியழகன் ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இந்த மனுவானது 28.06.2022 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 04.09.2023 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு. S. நீதிதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு. A. கைலாசநாதன் அவர்கள் ஆஜராகியும், மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்புகளை ஆராய்ந்தும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், இதுநாள்வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இந்த மனுவை உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2-இன் கீழ் வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் வில்லங்க மற்றும் பாராதீனம் செய்யக்கூடாது என்றும், வாதியின் அமைதியான சுவாதீனத்தை இடைஞ்சலும், தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்று நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர் தாக்கல் செய்த மனுவின் சுருக்கம்:-**

(i) மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். மனுதாரர் அசல் வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு முற்றிலும் வெளியாட்கள் ஆவார்கள். வழக்கு சொத்து ஆதியில் ஒரு சின்னத்தம்பி கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். கடந்த 24.02.1966 ஆம் தேதிய கிரைய ஆவணப்படி சின்னதம்பி கவுண்டருக்கு பாத்தியபட்டு, அவர் கடந்த 06.03.1972 ஆம் தேதியில் ஆவணம் எதுவும்

எழுதிவைக்காமல் அவரின் வாரிசுகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார். சின்னதம்பிகவுண்டரின் வாரிசுகளான முனியம்மாள், பழனியம்மாள், பெருமாயி, வெங்கடாசலம், செல்வி, சின்னத்தாயி, பூங்கொடி, ராஜேந்திரன், மாதம்மாள், கோவிந்தம்மாள், பூங்கொடி, ராணி மற்றும் அவரது இளவர் வாரிசுகள் ஆகியோர்களிடமிருந்து தகுந்த மறுபயன் கொடுத்து கடந்த 01.04.2022 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி மனுதாரர் கிரையம் பெற்று, கிரைய தேதியிலிருந்து சுவாதீன அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் வில்லங்க சான்று போட்டுபார்த்துதான் கிரையம் வாங்கினார். மேற்கண்ட கிரையம் குறித்து பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்துக்களை பொறுத்து எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் நிலுவையில் இல்லை. வழக்கு சொத்துக்களை பொறுத்து மனுதாரருக்கு எதிராக எந்த உத்தரவும் இல்லை. மனுதாரர் வழக்கு சொத்துக்கு கடந்த 27.04.2022 ஆம் தேதி பட்டா பெயர் மாற்றம் செய்யபோனபோது கிராம நிர்வாக அலுவலர் மேற்கண்ட பிரதிவாதிகள் கடந்த 25.04.2022 ஆம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பில் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என குறிப்பிட்டுள்ளதாக கூறினார். ஆனால் எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை.பிரதிவாதிகளுக்கு மனுதாரரின் கிரைய ஆவணம் செல்லாது என்றோ அல்லது மனுதாரருக்கு கிரையம் விற்றவர்களுக்கு கிரையம் செய்து கொடுக்க அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றோ அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. இந்தநிலையில், மனுதாரரை மிரட்டவோ, தொந்தரவு கொடுக்கவோ பிரதிவாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை. பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் எந்தவித சம்ம முகாந்திரமும் இல்லாமல் இடைஞ்சலும், தொந்தரவும் மனுதாரருக்கு கொடுத்து வருகிறார்கள். மேற்கண்ட 25.04.2022 ஆம் தேதிய அறிவிப்பில் கண்ட சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகளாகும். மனுதாரர் கடந்த 01.04.2022 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2672/2022 ஆம் எண்ணாக பதிவு செய்துள்ளார். மனுதாரர் கடந்த 28.04.2022 ஆம் தேதி வழக்கு சொத்தை மேம்படுத்த அதற்கான ஏற்பாடுகள் செய்த போது பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் விவசாய வேலைகளை செய்யவிடாமல் இடைஞ்சலும், தொந்தரவும் செய்து வந்தார்கள்.

(ii) இந்நிலையில் கடந்த 28.04.2022 ஆம் தேதி வழக்கு சொத்திற்கு பராமரிப்பு வேலை செய்ய போனபோது திடீரென பிரதிவாதிகள் அவரது அடியாட்களுடன் வந்து வழக்கு சொத்தில் இருந்து மனுதாரரை வெளியேறுமாறும் மிரட்டினார்கள். மனுதாரர் அதற்கு மறுத்தபோது, பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் வழக்கு சொத்தின் உள்ளே அத்துமீறி நுழையவும், சேதப்படுத்தவும் முயற்சி செய்தார்கள். ஆனால் மேற்கண்ட முயற்சியானது பக்கத்து நிலத்துக்காரர்களின்

உதவியால் தடுத்து நிறுத்தப்பட்டது. பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் வழக்கு சொத்திலிருந்து வெளியேறும்போது இரண்டொரு நாட்களில் இன்றும் அதிகப்படியான ஆட்களுடன் வந்து வழக்கு சொத்திலிருந்து மனுதாரரை வெளியேற்றி விட்டு ரோடு ஓரமுள்ள பகுதியை அளந்து உட்பிரிவு செய்து அதனை மூன்றாம் நபருக்கு விற்கபோவதாக மிரட்டி சென்றுள்ளார்கள். பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் பணபலமும், அரசியல் செல்வாக்கும் மிக்கவர்கள். பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் அவர்களது மிரட்டலை செயலாக்கும் பட்சத்தில் அது மனுதாரருக்கு வீண் வழக்கு நடவடிக்கைக்கு வழிவகுத்து, மனுதாரருக்கு பெருத்த கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்திவிடும். எனவே, வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் வில்லங்க மற்றும் பாராதீனம் செய்யக்கூடாது என்றும், வாதியின் அமைதியான சுவாதீனத்தை இடைஞ்சலும், தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்று நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3) 1 முதல் 3 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம் :-</u> **(இந்த எதிர்வழக்குரையை எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையாக பாவித்துக்கொள்ள கடந்த 25.11.2022 ஆம் தேதி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

(i) மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானது, மோசடியானது, சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர்கள் உண்மை என ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர்த்து ஏனைய அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார்.

(ii) பிரதிவாதிகளின் தாயார் பழனியம்மாள் பெயரில் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்ற அ.வ.எண்.424/1973 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின்படி மேற்கண்ட பழனியம்மாளின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கு புல எண்.573/1 இல் இந்த பிரதிவாதிகளுக்கு சட்டப்படியான உரிமை, பாத்தியம் ஏற்பட்டுள்ள விபரம் வாதிக்கு நன்கு தெரிந்தும், வாதி இந்த பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு வெளியாட்கள் என குறிப்பிட்டுள்ளதிலிருந்தே வாதியின் வழக்கில் உண்மையோ, நம்பகத்தன்மையோ இல்லை என்பது நிரூபணமாகிறது. வாதி பெயரிலான 01.04.2022 ஆம் தேதிய கிரைய பத்திரமானது பொய்யான, பெயரளவிலான, நடைமுறைக்கு வராத மோசடியான ஆவணமாகும். மேற்கண்ட கிரையப்பத்திரத்தில் கண்டுள்ளவாறான சக்குபந்திக்குள் வாதிக்கு கிரையம் செய்த நபர்களோ, அவர்களது கிரைய முன்னோர்களோ எப்போதும் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. அதனால்தான் அவர்கள் பெயரில் வழக்கு சொத்து குறித்து உட்பிரிவோ, தனி பட்டாவோ இது நாள்வரையில் ஏற்படவில்லை.

(iii) வாதிக்கு கிரையம் கொடுத்ததாக கூறும் நபர்களின் முன்னோரான சின்னதம்பி கவுண்டர் பெயரிலான 24.02.1996 ஆம் தேதியிட்ட கிரையப்பத்திரமே பொய்யான, பெயரளவிலான, நடைமுறைக்கு வராத மோசடியான ஆவணமாகும். மேற்கண்ட ஆவணத்தில் கண்டுள்ள சக்குபந்திக்குள் மேற்கண்ட சின்னதம்பி கவுண்டர் சொத்துக்களை அனுபவிக்கவில்லை. மேற்கண்ட புல எண்ணில் அளந்து நலந்திகடு அத்துகண்டு பாகப்பிரிவினை ஏற்படவுமில்லை. இந்த பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாள் மற்றும் அவரது சகோதரியான நல்லம்மாள் ஆகிய இருவரும் அப்போது சேலத்திலிருந்த மாண்புமிகு சங்ககிரி மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு புல எண்.573/1 இல் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.424/1973 வழக்கில் மேற்படி சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகள் 7 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டார்கள். பின்பு அவர்களுக்கு எதிராக அ.வ.எண்.424/1973 வழக்கில் முழு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 28.01.1975 ஆம் தேதியில் வழக்கு புல எண்.573/1 ல் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட தீர்ப்பாணை சரியானது என ஒப்புக்கொண்டு 7 முதல் 11 பிரதிவாதிகளாக இருந்த மேற்கண்ட சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகள் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. முதல்நிலை தீர்ப்பாணைக்கு பின்னிட்டு புல எண்.573/1 இல் உள்ள நிலங்களை பொறுத்து நாளதுவரை பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில், அதில் தரப்பினர்களாக கண்டுள்ள சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகளிடமிருந்து பாகம் பிரியாத புல எண்.573/1 ல் சக்குபந்திகள் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிட்டு வாதி கிரையம் பெற்றதாக கூறும் கிரையப்பத்திரம் சட்டப்படி இல்லாநிலையது, செல்லாது, அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். இந்த பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாளும், அவரது சகோதரியான நல்லம்மாளும் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களை சேர்த்து அவர்களுக்கு துணை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி இ.ம.எண்.759/2018 இன் அ.வ.எண்.424/1973 என்ற மனுவினை தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. வாதிக்கு கிரையம் செய்ததாக கூறும் நபர்கள் மேற்கண்ட மனுவில் கடந்த 2018 ஆம் ஆண்டிலேயே 37 முதல் 44 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டும், அவர்களில் சிலர் வாதியின் வழக்கறிஞர் மூலம் மேற்படி ஆஜராகி எதிர்வழக்காடி வரும் நிலையிலும் வாதி மேற்கண்ட இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ளது குறித்து மறைத்து மோசடியாக ஏற்படுத்தியுள்ள கிரையப் பத்திரமானது நிராகரிக்கப்பட வேண்டியதாகும். உண்மையில் வாதி மேற்படி அ.வ.எண்.424/1973 வழக்கு தீர்ப்பாணை, இ.ம.எண்.759/2018 நடவடிக்கைகளை மறைத்து வழக்கு சொத்துக்களை பொறுத்து மோசடியாக கிரையம் பெற்ற விபரம்

தெரிந்த உடனேயே இந்த பிரதிவாதிகள் வழக்கறிஞர்கள் மூலம் அறிவிப்பினை சங்ககிரி வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருக்கு மேற்படி அ.வ.எண்.424/1973 தீர்ப்பாணை மற்றும் இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ள விபரத்தை குறிப்பிட்டு பதிவஞ்சலில் அனுப்பி வழக்கு சொத்தில் பட்டாவில் பெயர் சேர்க்கக்கூடாது என்றும், உட்பிரிவு செய்யக்கூடாது என்றும் ஆட்சேபனை செய்திருந்தார்கள். இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையோ, தகுதிப்பாடோ இல்லை என்ற வகையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும்.

(iv) வழக்கு சொத்தின் சரியான, உண்மையான சந்தை விலைக்கு மதிப்பீடு செய்திருந்தால் மேற்படி வழக்கை விசாரிக்க சமூகம் நீதிமன்றத்திற்கு ஆளுகை வரம்பு இருந்திருக்காது. வழக்கு புல எண்.573/1ன் அனைத்து கூட்டு பங்குத்தாரர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத நிலையில் வாதியின் வழக்கு அவசியமான மற்றும் முக்கிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் முதன்மை நோக்கிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் தவறானது மற்றும் பொய்யானதாகும். வாதியின் கிரையப் பத்திரத்தில் கண்டுள்ளவாறு சொத்து பூஸ்திதியில் இல்லை. வாதியின் பெயரிலான கிரையப்பத்திரம் நடைமுறைக்கு வந்ததாக எந்தவிதமான சட்டப்படியான மற்றும் நம்பகமான ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையிலும், வாதியின் கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் வாதி வழக்கு சொத்துக்களில் சுவாதீனத்தில் உள்ளார் என கூறுவதை நிரூபிக்க வழக்குரையுடன் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்து முன்னிறுத்தாத நிலையிலும், வழக்கு புல எண்.573/1ன் உண்மையான மற்றும் சட்டப்படியான உரிமையாளர்களான இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர இயலாது என்ற வகையிலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதி தூய கரத்துடன் வழக்கினை தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்கு முன்பே வாதிக்கு சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.424/1973 வழக்கின் முதல் நிலை தீர்ப்பாணை, இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ள விபரங்கள் நன்கு தெரிந்திருந்தும் அவற்றை குறிப்பிடாமல் துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி இந்த வழக்கினை உண்மை சங்கதிகளை மறைத்தும், எவ்வித முகாந்திரமும், தகுதியான காரணமும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது பொய் குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டு, கற்பனையான வழக்கெழுமூலத்தையும் குறிப்பிட்டு தாக்கல் செய்து இந்த பிரதிவாதிகளுக்கு வீண் இடையூறு கொடுத்துள்ள நிலையில் வாதி நஷ்டஈடு செலவுத் தொகை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே, மனுதாரரின் இந்த மனுவானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) மனு பிரச்சனையை தீர்வு காணும் பொருட்டு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் எந்த ஆவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை. இரு தரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

<u>5) தீர்வு:-</u>

இரு தரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் கேட்கப்பட்டது. இம்மனுவானது வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் வில்லங்க மற்றும் பாராதீனம் செய்யக்கூடாது என்றும், வாதியின் அமைதியான சுவாதீனத்தை இடைஞ்சலும், தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்று நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் அசல் வழககு எண்.62/2022 ஆனது நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அசல் வழக்கில் இம்மனுதாரர் வாதி ஆவார். எதிர்மனுதாரர்கள், பிரதிவாதிகள் ஆவார்கள்.

7) மனுதாரர் தரப்பில் வழக்கு சொத்து ஆதியில் ஒரு சின்னத்தம்பி கவுண்டருக்கு பாத்தியப்பட்டதாகும். கடந்த 24.02.1966 ஆம் தேதிய கிரைய ஆவணப்படி சின்னதம்பி கவுண்டருக்கு பாத்தியபட்டு, அவர் கடந்த 06.03.1972 ஆம் தேதியில் ஆவணம் எதுவும் எழுதிவைக்காமல் அவரின் வாரிசுகளை விட்டுவிட்டு இறந்துவிட்டார். சின்னதம்பிகவுண்டரின் வாரிசுகளான முனியம்மாள், பழனியம்மாள், பெருமாயி, வெங்கடாசலம், செல்வி, சின்னத்தாயி, பூங்கொடி, ராஜேந்திரன், மாதம்மாள், கோவிந்தம்மாள், பூங்கொடி, ராணி மற்றும் அவரது இளவர் வாரிசுகள் ஆகியோர்களிடமிருந்து தகுந்த மறுபயன் கொடுத்து கடந்த 01.04.2022 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணப்படி மனுதாரர் கிரையம் பெற்று, கிரைய தேதியிலிருந்து சுவாதீன அனுபவம் செய்து வருகிறார். மனுதாரர் வில்லங்க சான்று போட்டுபார்த்துதான் கிரையம் வாங்கினார். மேற்கண்ட கிரையம் குறித்து பிரதிவாதிகளுக்கு நன்கு தெரியும். வழக்கு சொத்துக்களை பொறுத்து எந்த வழக்கும் எந்த நீதிமன்றத்திலும் நிலுவையில் இல்லை. வழக்கு சொத்துக்களை பொறுத்து மனுதாரருக்கு எதிராக எந்த உத்தரவும் இல்லை. மனுதாரர் வழக்கு சொத்துக்கு கடந்த 27.04.2022 ஆம் தேதி பட்டா பெயர் மாற்றம் செய்யபோனபோது கிராம நிர்வாக அலுவலர் மேற்கண்ட பிரதிவாதிகள் கடந்த 25.04.2022 ஆம் தேதி அனுப்பிய

வழக்கறிஞர் அறிவிப்பில் பட்டா பெயர் மாற்றம் செய்யக்கூடாது என குறிப்பிட்டுள்ளதாக கூறினார். ஆனால் எதிர்மனுதாரர்கள், மனுதாரருக்கு எந்த அறிவிப்பும் அனுப்பவில்லை.பிரதிவாதிகளுக்கு மனுதாரரின் கிரைய ஆவணம் செல்லாது என்றோ அல்லது மனுதாரருக்கு கிரையம் விற்றவர்களுக்கு கிரையம் செய்து கொடுக்க அவர்களுக்கு எந்த உரிமையும் கிடையாது என்றோ அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. இந்தநிலையில், மனுதாரரை மிரட்டவோ, தொந்தரவு கொடுக்கவோ பிரதிவாதிகளுக்கு எந்த அருகதையும் இல்லை. பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் எந்தவித சம்ம முகாந்திரமும் இல்லாமல் இடைஞ்சலும், தொந்தரவும் மனுதாரருக்கு கொடுத்து வருகிறார்கள். மேற்கண்ட 25.04.2022 ஆம் தேதிய அறிவிப்பில் கண்ட சங்கதிகள் வழக்கிற்காக சொல்லப்பட்ட பொய்யான சங்கதிகளாகும். மனுதாரர் கடந்த 01.04.2022 ஆம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை மகுடஞ்சாவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2672/2022 ஆம் எண்ணாக பதிவு செய்துள்ளார். மனுதாரர் கடந்த 28.04.2022 ஆம் தேதி வழக்கு சொத்தை மேம்படுத்த அதற்கான ஏற்பாடுகள் செய்த போது பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் விவசாய வேலைகளை செய்யவிடாமல் இடைஞ்சலும், தொந்தரவும் செய்து வந்தார்கள். இந்நிலையில் கடந்த 28.04.2022 ஆம் தேதி வழக்கு சொத்திற்கு பராமரிப்பு வேலை செய்ய போனபோது திடீரென பிரதிவாதிகள் அவரது அடியாட்களுடன் வந்து வழக்கு சொத்தில் இருந்து மனுதாரரை வெளியேறுமாறும் மிரட்டினார்கள். மனுதாரர் அதற்கு மறுத்தபோது, பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் வழக்கு சொத்தின் உள்ளே அத்துமீறி நுழையவும், சேதப்படுத்தவும் முயற்சி செய்தார்கள். ஆனால் மேற்கண்ட முயற்சியானது பக்கத்து நிலத்துக்காரர்களின் உதவியால் தடுத்து நிறுத்தப்பட்டது. பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் வழக்கு சொத்திலிருந்து வெளியேறும்போது இரண்டொரு நாட்களில் இன்றும் அதிகப்படியான ஆட்களுடன் வந்து வழக்கு சொத்திலிருந்து மனுதாரரை வெளியேற்றி விட்டு ரோடு ஓரமுள்ள பகுதியை அளந்து உட்பிரிவு செய்து அதனை மூன்றாம் நபருக்கு விற்கபோவதாக மிரட்டி சென்றுள்ளார்கள். பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் பணபலமும், அரசியல் செல்வாக்கும் மிக்கவர்கள். பிரதிவாதிகளும், அவரது ஆட்களும் அவர்களது மிரட்டலை செயலாக்கும் பட்சத்தில் அது மனுதாரருக்கு வீண் வழக்கு நடவடிக்கைக்கு வழிவகுத்து, மனுதாரருக்கு பெருத்த கஷ்டத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்திவிடும். எனவே, வழக்கு சொத்துக்களை பிரதிவாதிகள் வில்லங்க மற்றும் பாராதீனம் செய்யக்கூடாது என்றும், வாதியின் அமைதியான சுவாதீனத்தை இடைஞ்சலும், தொந்தரவும் கொடுக்கக்கூடாது என்று நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் கோரி இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

8) எதிர்மனுதாரர்கள் தரப்பில் பிரதிவாதிகளின் தாயார் பழனியம்மாள் பெயரில் சங்ககிரி மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்ற அ.வ.எண்.424/1973 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட முதல்நிலை தீர்ப்பாணையின்படி மேற்கண்ட பழனியம்மாளின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வழக்கு புல எண்.573/1 இல் இந்த பிரதிவாதிகளுக்கு சட்டப்படியான உரிமை, பாத்தியம் ஏற்பட்டுள்ள விபரம் வாதிக்கு நன்கு தெரிந்தும், வாதி இந்த பிரதிவாதிகள் வழக்கு சொத்திற்கு வெளியாட்கள் என குறிப்பிட்டுள்ளதிலிருந்தே வாதியின் வழக்கில் உண்மையோ, நம்பகத்தன்மையோ இல்லை என்பது நிரூபணமாகிறது. வாதி பெயரிலான 01.04.2022 ஆம் தேதிய கிரைய பத்திரமானது பொய்யான, பெயரளவிலான, நடைமுறைக்கு வராத மோசடியான ஆவணமாகும். மேற்கண்ட கிரையப்பத்திரத்தில் கண்டுள்ளவாறான சக்குபந்திக்குள் வாதிக்கு கிரையம் செய்த நபர்களோ, அவர்களது கிரைய முன்னோர்களோ எப்போதும் சுவாதீன அனுபவத்தில் இருந்ததில்லை. அதனால்தான் அவர்கள் பெயரில் வழக்கு சொத்து குறித்து உட்பிரிவோ, தனி பட்டாவோ இது நாள்வரையில் ஏற்படவில்லை. வாதிக்கு கிரையம் கொடுத்ததாக கூறும் நபர்களின் முன்னோரான சின்னதம்பி கவுண்டர் பெயரிலான 24.02.1996 ஆம் தேதியிட்ட கிரையப்பத்திரமே பொய்யான, பெயரளவிலான, நடைமுறைக்கு வராத மோசடியான ஆவணமாகும். மேற்கண்ட ஆவணத்தில் கண்டுள்ள சக்குபந்திக்குள் மேற்கண்ட சின்னதம்பி கவுண்டர் சொத்துக்களை அனுபவிக்கவில்லை. மேற்கண்ட புல எண்ணில் அளந்து நலந்திகடு அத்துகண்டு பாகப்பிரிவினை ஏற்படவுமில்லை. இந்த பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாள் மற்றும் அவரது சகோதரியான நல்லம்மாள் ஆகிய இருவரும் அப்போது சேலத்திலிருந்த மாண்புமிகு சங்ககிரி மாவட்ட உரிமையியல் நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு புல எண்.573/1 இல் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்த அ.வ.எண்.424/1973 வழக்கில் மேற்படி சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகள் 7 முதல் 11 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டார்கள். பின்பு அவர்களுக்கு எதிராக அ.வ.எண்.424/1973 வழக்கில் முழு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 28.01.1975 ஆம் தேதியில் வழக்கு புல எண்.573/1 ல் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் பிறப்பிக்கப்பட்டது. மேற்கண்ட தீர்ப்பாணை சரியானது என ஒப்புக்கொண்டு 7 முதல் 11 பிரதிவாதிகளாக இருந்த மேற்கண்ட சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகள் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. முதல்நிலை தீர்ப்பாணைக்கு பின்னிட்டு புல எண்.573/1 இல் உள்ள நிலங்களை பொறுத்து நாளதுவரை பாகப்பிரிவினை ஏற்படாத நிலையில், அதில் தரப்பினர்களாக கண்டுள்ள சின்னதம்பி கவுண்டரின் வாரிசுகளிடமிருந்து பாகம் பிரியாத புல எண்.573/1 ல் சக்குபந்திகள் மற்றும் விஸ்தீரணம் குறிப்பிட்டு வாதி கிரையம் பெற்றதாக கூறும் கிரையப்பத்திரம் சட்டப்படி இல்லாநிலையது, செல்லாது, அதன் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட

வேண்டியதாகும். இந்த பிரதிவாதிகளின் தாயாரான பழனியம்மாளும், அவரது சகோதரியான நல்லம்மாளும் சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி முதல்நிலை தீர்ப்பாணையின் அடிப்படையில் அவர்கள் கிரையம் பெற்ற சொத்துக்களை சேர்த்து அவர்களுக்கு துணை முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி இ.ம.எண்.759/2018 இன் அ.வ.எண்.424/1973 என்ற மனுவினை தாக்கல் செய்து, நிலுவையில் உள்ளது. வாதிக்கு கிரையம் செய்ததாக கூறும் நபர்கள் மேற்கண்ட மனுவில் கடந்த 2018 ஆம் ஆண்டிலேயே 37 முதல் 44 எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டும், அவர்களில் சிலர் வாதியின் வழக்கறிஞர் மூலம் மேற்படி ஆஜராகி எதிர்வழக்காடி வரும் நிலையிலும் வாதி மேற்கண்ட இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ளது குறித்து மறைத்து மோசடியாக ஏற்படுத்தியுள்ள கிரையப் பத்திரமானது நிராகரிக்கப்பட வேண்டியதாகும். உண்மையில் வாதி மேற்படி அ.வ.எண்.424/1973 வழக்கு தீர்ப்பாணை, இ.ம.எண்.759/2018 நடவடிக்கைகளை மறைத்து வழக்கு சொத்துக்களை பொறுத்து மோசடியாக கிரையம் பெற்ற விபரம் தெரிந்த உடனேயே இந்த பிரதிவாதிகள் வழக்கறிஞர்கள் மூலம் அறிவிப்பினை சங்ககிரி வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலருக்கு மேற்படி அ.வ.எண்.424/1973 தீர்ப்பாணை மற்றும் இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ள விபரத்தை குறிப்பிட்டு பதிவஞ்சலில் அனுப்பி வழக்கு சொத்தில் பட்டாவில் பெயர் சேர்க்கக்கூடாது என்றும், உட்பிரிவு செய்யக்கூடாது என்றும் ஆட்சேபனை செய்திருந்தார்கள். இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய சட்டப்படி உரிமையோ, தகுதிப்பாடோ இல்லை என்ற வகையில் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வழக்கு சொத்தின் சரியான, உண்மையான சந்தை விலைக்கு மதிப்பீடு செய்திருந்தால் மேற்படி வழக்கை விசாரிக்க சமூகம் நீதிமன்றத்திற்கு ஆளுகை வரம்பு இருந்திருக்காது. வழக்கு புல எண்.573/1 ன் அனைத்து கூட்டு பங்குத்தாரர்களையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்காத நிலையில் வாதியின் வழக்கு அவசியமான மற்றும் முக்கிய தரப்பினர்களை சேர்க்காத காரணத்தினால் முதன்மை நோக்கிலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் தவறானது மற்றும் பொய்யானதாகும். வாதியின் கிரையப் பத்திரத்தில் கண்டுள்ளவாறு சொத்து பூஸ்திதியில் இல்லை. வாதியின் பெயரிலான கிரையப்பத்திரம் நடைமுறைக்கு வந்ததாக எந்தவிதமான சட்டப்படியான மற்றும் நம்பகமான ஆவணமும் தாக்கல் செய்யாத நிலையிலும், வாதியின் கிரையப் பத்திரத்தின் அடிப்படையில் வாதி வழக்கு சொத்துக்களில் சுவாதீனத்தில் உள்ளார் என கூறுவதை நிரூபிக்க வழக்குரையுடன் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்து முன்னிறுத்தாத நிலையிலும், வழக்கு புல எண்.573/1 ன் உண்மையான மற்றும் சட்டப்படியான உரிமையாளர்களான இந்த பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோர இயலாது

என்ற வகையிலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். வாதி தூய கரத்துடன் வழக்கினை தாக்கல் செய்யவில்லை. வழக்கிற்கு முன்பே வாதிக்கு சங்ககிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.424/1973 வழக்கின் முதல் நிலை தீர்ப்பாணை, இ.ம.எண்.759/2018 மனு நிலுவையில் உள்ள விபரங்கள் நன்கு தெரிந்திருந்தும் அவற்றை குறிப்பிடாமல் துர்லாபம் அடையவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி இந்த வழக்கினை உண்மை சங்கதிகளை மறைத்தும், எவ்வித முகாந்திரமும், தகுதியான காரணமும் இல்லாமல் பிரதிவாதிகள் மீது பொய் குற்றச்சாட்டுகளை குறிப்பிட்டு, கற்பனையான வழக்கெழுமூலத்தையும் குறிப்பிட்டு தாக்கல் செய்து இந்த பிரதிவாதிகளுக்கு வீண் இடையூறு கொடுத்துள்ள நிலையில் வாதி நஷ்டஈடு செலவுத் தொகை கொடுக்க கடமைப்பட்டவர் ஆவார். எனவே, மனுதாரரின் இந்த மனுவானது செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்ற வாதம் முன்வைக்கப்பட்டுள்ளது.

9) இரு தரப்பில் முன்வைக்கப்பட்ட சங்கதிகள் மற்றும் வாதங்களை நன்கு பரிசீலனை செய்கையில் மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரத்தையையே இடைநிலை மனுவிலும் கோரியுள்ளார். மனுதாரர் அசல் வழக்கில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரமும், இந்த இடைநிலை மனுவில் கோரியுள்ள இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரமும் ஒரே மாதிரியான தன்மை கொண்டவையாகவும், ஒத்த இயல்பு உடையனவாகவும் உள்ளது. எனவே, மனுதாரர்கள் எழுப்பியுள்ள பிரச்சனையும், அதன் தகுதிபாடுகளையும் இடைநிலை மனுவில் தீர்ப்பது என்பது ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்துவதற்கு ஒப்பானதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10) மேலும், இவ்வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும், தரப்பினர்களின் வாதங்களையும் கருத்தில் கொண்டு, இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரதான பிரச்சனையானது வழக்கு சொத்தின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்தில் மனுதாரர் உள்ளரா ? என்பதும், மேற்படி மனுதாரரின் சட்டப்படியான சுவாதீன அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தரா ? என்பதே ஆகும்.

11) மேற்படி சங்கதிகள் மற்றும் பிரச்சனைகள் குறித்து தரப்பினர்கள் முன்வைத்துள்ள சாட்சியங்களின் அடிப்படையிலேயே அவற்றை தீர்மானிக்க முடியும். மேலும், இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனையானது சங்கதிகள்

தொடர்பான எழுவினாவாக உள்ளது என தெரிய வருகிறது. இவ்வழக்கானது பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு, எழுவினாக்கள் கடந்த 22.12.2022 ஆம் தேதியில் வனையப்பட்டு விசாரணைக்காக தயார்நிலையில் உள்ளது. மேற்கண்டவைகளை கருத்தில் கொள்கையில் மேற்படி எழுவினாவை வழக்கு விசாரணையின்போது தரப்பினர்களால் முன்வைக்கப்படும் வாய்மொழி ஆவண சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

12) மாண்புமிகு உச்சநீதிமன்றம் " Anand Prasad Agarwalla Vs Tarkeshwar Prasad and Others, reported in 2001 (5) SCC 568” என்ற வழக்கில் " It may not be appropriate for any court to hold mini-trial at the stage of grant of temporary injunction.” என்ற சட்ட நிலைபாடு வகுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட சட்ட நிலைப்பாட்டின் அடிப்படையில் மனுதாரரால் காண்பிக்கப்பட்டுள்ள முதல் தோற்ற வழக்கானது இரு தரப்பு வாதங்களின் அடிப்படையில் வழக்கு விசாரணையின் மூலம் தான் தீர்மானிக்க இயலும் என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. இச்சூழ்நிலையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மேற்கண்ட வழக்கில் குறிப்பிட்டுள்ளபடி இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்க ஒரு சிறிய வழக்கு விசாரணையை நடத்த அவசியம் இல்லை என்று முடிவு செய்கிறது.

13) முடிவாக, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 10.10.2023 ஆம் தேதி திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R RADHAKRISHNAN
Digitally signed by R RADHAKRISHNAN
Date: 2023.10.10 18:16:57 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.

**<u>பிற்சேர்க்கை:-</u>**

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்</u>**: இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | | |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | 28.01.1975 | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரியில் அசல் வழக்கு எண்.424/1973 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை - நகல் |
| எ.ம.சா.ஆ.2 | --- | மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரியில் இ.ம.எண்.759/2018 மனுவின் மனு மற்றும் பிரமாண பத்திரிக்கை - நகல் |

R RADHAKRISHNAN Digitally signed by R RADHAKRISHNAN Date: 2023.10.10 18:17:14 +0530

மா.உ.நீ.,
சங்ககிரி.